**தலைப்பு 06 – அரசாங்க சேவை ஆணைக்குழு**

-----------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 06 – அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்

கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

# 2 நிதி மீளாய்வு

## 2.1 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2024 ஆண்டு ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 1,457,443 தொகைக்கான 2023 ஆண்டிற்குரிய 03 செலவு விடயங்களுக்கான பொறுப்புக்கள் நி.பி. 94(2) மற்றும் (3) இற்கு இணங்க பொறுப்புக்களுக்கு அணுகிய ஈடுபாட்டுப் பொறுப்புக் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. அவற்றில் ஒரு செலவு விடயத்தின் ஏற்பாடுகளின் சேமிப்பினை ரூபா 58,280 தொகையினால் மிகைத்திருந்தது. | காட்டப்பட்டுள்ள பில் பத்திரங்கள் திசெம்பர் மாதத்துக்குரிய பில் பத்திரங்களாக காணப்படுவதுடன், அவற்றை கொடுப்பனவு செய்வதற்காக உறுதிச் சீட்டுக்கள் ஜனவரி மாதமே கிடைத்திருந்தது. பொறுப்புக்கள் கூற்று தயாரிக்கும் போது இந்த பில் பத்திரங்கள் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் பொறுப்புக்கள் கூற்றில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டுக்குரிய அனைத்துப் பொறுப்புக்களும் பொறுப்புக்களுக்கு அணுகப்பட்ட ஈடுபாட்டுப் பொறுப்புக் கூற்றில் உட்படுத்தப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2009 பெப்ரவரி 20 திகதிய 1589/30 இலக்கம் கொண்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிஷேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்படு முறைமை விதிகளில் 237 ஆம் பிரிவிற்கு இணங்க ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்ட மேன்முறையீடொன்று ஆணைக்குழுவிற்கு கிடைத்து இடமாற்றம் தொடர்பாக 15 நாட்களும் மற்றும் பதவி உயர்வு சம்பந்தமாக 45 நாட்களுக்குள் தீர்மானம் ஒன்று ஆணைக்குழுவினால் எடுக்கப்பட வேண்டும். அவ்வாறாயினும், தெரிவுப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்ட 2015 ஆண்டு முதல் 2021 வரையான காலப் பகுதியில் கிடைத்திருந்த வேண்டுதல்கள் தொடர்பாக 10 மேம்முறையீட்டுக் கோப்புக்களில் 04 கோப்புக்கள் தொடர்பான தீர்மானம் 2024.01.22 திகதி அளவிலும் வழங்கியிருக்காததுடன், தீர்மானம் வழங்கப்பட்டிருந்த 06 கோப்புக்களுக்காக தீர்மானம் வழங்குவதற்கு 01 வருடத்திற்கும் 07 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்தது. | மேன்முறையீட்டுப் பிரிவிற்கு கிடைக்கக் கூடிய அனேகமானவை மேற்முறையீடுகள், உத்தியோகத்தரினால் தாமத்தை தவிர்ப்பதற்காக முன்னேற்ற பிரதியொன்று வீதம் அனுப்பப்படுகின்ற மேற்முறையீடுகளாக காணப்படுவதுடன், அந்த மேன்முறையீடு தொடர்பாக உரிய அமைச்சுக்களிடம் இருந்து அவதானிப்புக்கள் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை மற்றும் கோப்புக்கள் அழைக்கப்பட்ட போதிலும் அந்த ஆண்டிலேயே அவ்வறிக்கைகள் கிடைக்கப்படாமையால் மேற்முறையீடொன்று கிடைத்த ஆண்டிலேயே ஆணைக்குழுவின் தீர்மானம் வழங்குவதற்கு முடியாதுள்ளது. அதன்படி, மீளாய்வாண்டின் போது கிடைக்கக்கூடிய மேன்முறையீடுகளின் எண்ணிக்கை மற்றும் அந்த மேன்முறையீடுகளுக்காக ஆண்டின் போது தீர்மானம் வழங்கப்பட்டு விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்ட எண்ணிக்கை மீது மாத்திரம் செயலாற்றுகை கணிப்பீடு செய்யப்படின், குறிப்பிட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கும் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் குறிப்பிட்ட அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்காக எடுக்கக் கூடிய காலத்தில் மீது தீர்மானிக்கப்படும் என அவதானிக்கின்றேன். | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்படு முறைமைக்கான விதிகளின் 237 ஆவது பிரிவிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2009 பெப்ரவரி 20 திகதி 1589/30 இலக்கம் கொண்ட ஆணைக்குழுவின் செயற்படு முறைமை விதியை இரத்துச் செய்து வெளியிடப்பட்டிருந்த 2022 பெப்ரவரி 14 திகதிய மற்றும் இலக்கம் 2310/29 கொண்ட செயற்படு முறையின் விதிகளில் பதவியுயர்வுகள் தொடர்பான மேன்முறையீடுகளுக்காக தீர்மானம் வழங்கும் கால வரையறை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகளின் எண்ணிக்கையின் ஒரு மேன்முறையீடு தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்காக நேரிடும் காலத்தின் அடிப்படையில் கால வரையறையொன்று விதித்தல் செய்முறையற்றதாகும். எவ்வாறாயினும், மேன்முறையீடு ஒன்று தொடர்பாக செயற்படும் போது காரணமின்றிய தாமதம் ஒன்று ஏற்படுவதை தவிர்ப்பதற்காக உள்ளக நிலையியற் கட்டளைகள் விதிக்கப்பட்டுள்ளது. | 1589/30 இலக்கம் கொண்ட ஆணைக்குழுவின் செயற்படு முறைமை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதவியுயர்வுகள் தொடர்பான கிடைக்கக்கூடிய மேன்முறையீடுகளுக்காக தீர்மானம் வழங்குவதற்கான காலம் குறிப்பிடப்பட வேண்டும். |
| (இ) | ஆணைக்குழுவின் ஒழுக்காற்று காட்டுப்பாட்டின் கீழ் உத்தியோகத்தர்களின் ஒழுக்கம் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் ஆணைக்குழுவின் பிரதான கருமம் ஒன்றாக காணப்படுவதுடன், இலங்கை சனநாயக சோசலிச குடியரிசின் தாபனக் கோவையின் தொகுதி II அத்தியாயம் XLXIII தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 30/2019 கொண்ட மற்றும் 2019 செப்தம்பர் 30 திகதிய பொது நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க முறையான ஒழுக்காற்று விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு 06 மாதங்களுக்குள் அது பூர்த்தி செய்யப்பட வேண்டும் என குறிப்பிட்டிருந்த போதிலும், தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைக்கு ஆளாக்கிய 08 ஒழுக்காற்று அலுவல்கள் அந்த கோறிக்கைகள் கிடைத்து 02 வருடங்கள் முதல் 04 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் 2024 பெப்ரவரி 24 திகதி அளவிலும் அந்த ஒழுக்காற்று அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | வரைபு அறிக்கைக்காக பதிலளித்திருக்கவில்லை. | 30/2019 இலக்கம் கொண்ட மற்றும் 2019 செப்தம்பர் 30 திகதிய பொது நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டியிருந்தது. |

### 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 10.2 இற்கு இணங்க அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்திற்கு இணங்க வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவின் சுகாதார சேவைக் குழு, தாபனப் பிரிவு, ஒழுக்காற்றுப் பிரிவு, நியமனப் பிரிவு மற்றும் பதவியுயர்வுப் பிரிவுகளால் 2023 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டிருந்த கருமங்களின் எண்ணிக்கை மாத்திரம் செயலாற்றுகை அறிக்கையில் உட்படுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது பிரிவுக்கு கிடைத்திருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை, அந்த முறைப்பாடுகளில் பூர்த்தி செய்யப்பட்ட எண்ணிக்கை மற்றும் தொடர்ந்து மீதியாக காணப்படும் எண்ணிக்கை ஆகிய தகவல்கள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன்படி, 2023 செயலாற்றல் அறிக்கையில் 2023 ஆண்டில் செயலாற்றுகை மட்டத்தை கவனத்தில் எடுக்கக்கூடிய அளவு போதியளவு விடயங்கள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படுகின்ற கடிதங்கள் மற்றும் ஆவனங்களுக்காக நடவடிக்கை எடுக்கும் போது வெளி நிறுவனங்களின் மூலம் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் அழைக்கப்படுவதுடன், அதற்காக பதிலளிக்கப்படும் காலத்தின் படி அந்த விடயம் பூர்த்தி செய்யப்படும் ஆண்டு கோறிக்கை / முறைப்பாடு கிடைத்த ஆண்டாக காணப்படாமல் இருப்பதற்கு சந்தர்ப்பங்கள் காணப்படுவதுடன், தொடர்ந்து வரக்கூடிய ஆண்டு பூர்த்தி செய்வதற்கு நேரிடுகின்றது. அதன் காரணமாக வேறு தரப்பினரின் தாமதங்கள் காரணமாக இந்த கருமங்களை பூர்த்தி செயற்வதற்கு எடுக்கக்கூடிய காலம் இந்த அலுவலகத்தின் மீளாய்வாண்டிற்கான செயலாற்றுகை தீர்மானத்திற்கு காரணமாக்கிக்கொள்ளல் ஆக்கபூர்வமற்றதாக காணப்படுகின்றதென அவதானிக்கின்றேன். | செயலாற்றுகை அறிக்கையில் ஆண்டிற்கான செயலாற்றுகை மட்டத்தை கணிப்பதற்கு போதியளவு விடயங்கள் உட்படுத்தப்பட வேண்டியிருந்தது. |
| (ஆ) | 2023 ஆண்டில் மேன்முறையீட்டுப் பிரிவிற்கு கிடைத்திருந்த மேன்முறையீடுகளின் எண்ணிக்கை பொருண்மையானவை என காட்டப்பட்டிருந்த போதிலும், அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளுடன் அறிக்கைகள் அழைக்கப்பட்ட மேற்முறையீடுகளின் எண்ணிக்கை சமர்ப்பிக்கும் போது | மேன்முறையீடடுப் பிரிவிற்கு கிடைக்கக் கூடிய மேன்முறையீடுகள் தொடர்பாக குறிப்பிட்ட அமைச்சுக்களில் இருந்து அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளுடனான அறிக்கைகள் மற்றும் கோப்புக்களை தருவித்துக்கொள்வதற்காக | செயலாற்றுகை அறிக்கையில் ஆண்டிற்கான செயலாற்றுகை மட்டத்தை கவனத்தில் எடுப்பதற்கு போதியளவு விடயங்கள் உட்படுத்தப்பட வேண்டியுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | அவை மீளாய்வாண்டின் மற்றும் முன்னைய ஆண்டுகளின் மேன்முறையீட்டு எண்ணிக்கையையும் உட்படுத்தி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன் காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அந்தப் பிரிவின் மீளாய்வாண்டின் செயலாற்றுகை மட்டத்தை தீர்மானிப்பதற்கு போதியளவு தகவல்கள் சமர்ப்பித்திருக்கவில்லை. | மேன்முறையீட்டுப் பிரிவினால் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. குறிப்பிட்ட அமைச்சு மற்றும் திணைக்களங்களில் இருந்து அறிக்கைகள் அழைக்கப்பட்ட போதிலும், அந்த ஆண்டிலேயே அறிக்கைகள் கிடைக்கப்படாததுடன், அதன் காரணமாக மேன்முறையீடு கிடைத்த ஆண்டிலேயே ஆணைக்குழுவினால் தீர்மானம் வழங்க முடியாதிருந்தது. அதனபடி, மீளாய்வாண்டின் கிடைக்கக்கூடிய மேன்முறையீடுகளின் எண்ணிக்கை மற்றும் அந்த மேன்முறையீடுகளுக்காக அந்த ஆண்டினுள்ளேயே தீர்மானம் ஒன்று வழங்குவற்காக அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கையின் மீது மாத்திரம் செயலாற்றுகையை கணித்தல், அந்த செயலாற்றுகைக்குரிய அறிக்கைகள் வழங்கும் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் குறிப்பிட்ட அறிக்கை சமர்ப்பிப்பதற்காக எடுக்கப்படுகின்ற காலத்தின் மீது தீர்மானிக்கப்படுகின்றது என அவதானிக்கின்றேன். | |
| (இ) | 2023 செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நிறைவேற்றுவதற்காக எதிர்ப்பார்க்கப்பட்டிருந்த ஒவ்வொரு கருமங்களின் இலக்குகள் அல்லது கிடைத்திருந்த கருமங்களின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருக்காத போதிலும் செயலாற்றுகை சுட்டியின் கீழ் எதிர்ப்பார்த்த வெளியீடு சதவீதமாக உண்மையான வெளியீடு 100 சதவீதத்திற்கும் 90 சதவீதத்திற்கும் இடைப்பட்ட சதவீதம் காட்டப்பட்டிருத்தல் சிக்கல் தன்மையாக இருந்தது. | இந்த அலுவலகத்திற்கு கிடைக்கக்கூடிய விண்ணப்பங்களின் எண்ணிக்கையை அறுதியாக எதிர்வு கூறக்கூடிதாக இயலுமை ஒன்று காணப்படாமையாலும், முன்னைய ஆண்டுகளின் போதும் இந்த கணக்காய்வு ஐயவினாக்கல் மூலம் தொடர்ச்சியாக இவ் விடயங்கள் தொடர்பாக வினவப்பட்டதனால், 2023 செயலாற்றுகை அறிக்கையில் இந்த அலுவலகத்திற்கு அந்த வருடத்திலே சமர்ப்பிக்கபடும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையின் சதவீதப்படி உண்மையான வெளியீடு காட்டப்பட்டுள்ளது. இங்கு அந்த | உள்ளவாறான வெளியீட்டுச் சதவீதம் காட்டப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வரிசை தலைப்புக்காக அரச நிதிச் சுற்றறிக்கை 02/2020 மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த படிவத்தில் வரிசைத் தலைப்பு அதே மாதிரியே பயன்படுத்தப்பட்டிருந்தது. | |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவிற்கு சொந்தமான ரூபா 2,850,000 கிரயத்தையுடைய மோட்டார் வாகனம் ஒன்று 2020 ஆண்டு முதல் கணக்காய்வுத் திகதியாகிய 2024 மார்ச் 27 திகதி வரை ஓட்டநிலை அற்றுக் காணப்பட்டது. | இந்த வாகனத்தை அகற்றுவதற்காக செய்தித்தாள் அறிவித்தல் மூலம் கூறுவிலைகள் அழைக்கப்பட்டதுடன், சமர்ப்பிக்கபட்டிருந்த கூறுவிலைகளின் படி உச்ச விலை சமர்ப்பித்திருந்த கொள்வனவாளருக்கு குறிப்பிட்ட தொகையை செலுத்து வாகனத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கும் படி 2024.04.04 திகதி அறிவிக்கப்பட்டது. | ஓட்டநிலையற்று காணப்படும் வாகனம் தொடர்பாக பொறுத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4 முகாமைத்துவத் திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒழுக்காற்று விசாரணைக்காக நியமனம் செய்யப்பட்டிருந்த விசாரணை உத்தியோகத்தரினால் 03 தவணைகளில் விசாரணைகள் மேற்கொண்ட பின்னர் விலகியிருந்தவுடன், தொடர்ந்து புதிய விசாரணை உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு ஒழுக்காற்று விசாரணை அலுவல்கள், ஆரம்பம் முதல் தொடங்கியிருந்ததுடன், 03 மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று விசாரணை தவணைகளுக்காக முன்னைய விசாரணை அலுவலருக்கு | விசாரணை உத்தியோகத்தரினால் விசாரணை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்ட 03 தவணைகளின் அறிக்கையை ஆய்வு செய்த பின்னர் பொ.நி.சு. 18/2018 இல் குறிப்பிட்டவாறு குறிப்பிட்ட விசாரணைக் கட்டணம் மற்றும் பிரயாணச் செலவு என ரூபா 20,252 தொகை செலுத்தப்பட்டிருந்தது. ஒழுக்காற்று விசாரணை அலுவல்களில் இருந்து அகன்றிருந்த | புதிய ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர் நியமனம் செய்யப்பட்டு ஒழுக்காற்று விசாரணை அலுவல்கள் ஆரம்பம் முதல் தொடர்ங்கப்பட்டிருந்ததால் மேற்கொள்ளப்பட்டிருந்த ஒழுக்காற்று விசாரணைகளின் 03 தவணைகளுக்காக கொடுப்பனவு செய்தல் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டு செய்முறை ஒன்று அறிமுகப்படுத்த |

| | | | |
|---|---|---|---|
| | ஆணைக்குழுவினால் ரூபா 20,252 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | உத்தியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கையை ஆய்வு செய்த பின்னர் கல்வித் சேவைக் குழுவினால் இந்த விசாரணையை ஆரம்பத்திலிருந்தே தொடங்கும் படி கட்டளை வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, புதிய விசாரணை உத்தியோகத்தரினால் ஆரம்பத்திலிருந்தே தொடங்கப்பட்டு விசாரணை நடாத்தி தற்போது நடவடிக்கைகள் விசாரணை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்வதற்காக திட்டமிடப்பட்டுள்ள ஒவ்வொரு பெறுகை விடய வகைகள் பெறுகைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருக்காததுடன், பாதீட்டு மதிப்பீட்டில் ஒவ்வொரு மூலதனச் செலவு விடயங்களும் மற்றும் அதன் கீழ் குறிப்பிடப்படும் பாதீட்டுத் தொகை காட்டப்பட்டிருந்தது. மேலும், திட்டத்தில் சேவைகளின் கீழ் உடல் ஆரோக்கிய சேவை, பாதுகாப்புச் சேவைகளுக்காக மதிப்பிடப்பட்ட செலவு காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதி அமைச்சு மற்றும் குறிப்பிட்ட திணைக்களங்களினால் அவ்வப்போது வெளியிடுகின்ற சுற்றறிக்கைகளுக்கு இணங்க பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டது. உடல் ஆரோக்கியச் சேவை மற்றும் பாதுகாப்புச் சேவை பெறுகைத் திட்டத்தின் படி செயற்படுத்தப்பட்டதுடன், அடுத்த வருடம் மதிப்பீட்டுத் தொகையும் அதில் உட்படுத்துமாறு குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. | ஒவ்வொறு பெறுகை விடய வகைகள் பெறுகைத் திட்டத்தில் உட்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2022 செப்தம்பர் 01 திகதி முதல் 2023 ஆகஸ்ட் 31 திகதி வரையான காலப் பகுதிக்காக மின்பிறப்பாக்கி இயந்திரம் மற்றும் 2022 ஜுலை 13 திகதி முதல் 2023 ஜுலை 14 வரையான காலப் பகுதிக்காக தீ பாதுகாப்பு முறைமைச் சேவை மற்றும் பராமரிப்புக்காக உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் அந்த மின்பிறப்பாக்கி இயந்திரம் மற்றும் தீ பாதுகாப்பு முறைமைச் சேவை மற்றும் பராமரிப்புக்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கூட்டுத்தொகை ரூபா 655,500 | நிறுவனத்தினால் ஐந்து வருட காலப் பகுதிக்காக சேவை உடன்படிக்கைகள் மேற்கொள்வதற்காக மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி, ஒவ்வொரு ஆண்டிலும் குறிப்பிட்ட தனியார் நிறுவனத்துடன், சேவை உடன்படிக்கைக்காக நிறுவனம் இணக்கம் தெரிவித்திருந்தது. 2022/2023 ஆண்டுகள் தொடர்பாக இந்த நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூறுவிலைகளிடையே வித்தியாசம் ஒன்று (அதிகரிப்பு) காணப்பட்டது. அதன்படி, | உரிய காலப் பகுதிகளில் குறிப்பிட்ட உடன்படிக்கைகளுக்கு அணுகுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அவர்களினால் பின்னர் கூறுவிலைகளை குறைத்து குறிப்பிட்ட உடன்படிக்கைகளை திருத்தி சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால் இவ்வாறான தாமதம் ஒன்று ஏற்பட்டிருந்தது. | |

**4. நல்லாளுகை**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 1918 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆவது பிரிவிற்கு இணங்க பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் மேற்கொள்வதற்காக தகைமையுடைய கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2023 ஒக்தோபர் 03 திகதி முதல் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டது. | இந்த அலுவலகத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் பதவியில் வெற்றிடத்தை நிரப்பும் படி பொது நிருவாக உள்நாட்டு விவகார மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டதுடன், இதுவரை உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்து அனுப்பப்படவில்லை. | தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 40 இற்கு இணங்க உள்ளகக் கணக்காய்வு செயற்படுத்தப்பட வேண்டியிருந்தது. |

**5. மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2019 ஜனவரி 28 திகதிய முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த இரண்டு தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகளுக்காக 2024 பெப்ரவரி 29 திகதி அளவிலும் உத்தியோத்தர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | கட்டிடத்தில் ஏற்படுகின்ற நிலைமைகள் தொடர்பாக தொழில்நுட்ப பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடுகளின் அடிப்படையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்), தொழில்நுட்ப உத்தியோகத்தர் (இயந்திரம்) என இரண்டு பதவிகள் முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தினால் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்போது கட்டிடத்தின் பராமரிப்பு | அத்தியவசியமான பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அல்லது தேவையற்ற பதவிகள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவல்கள் முன் இணக்கத்தின் மூலம் உடன்படிக்கைச் சேவைகளின் மூலம் நிறைவேற்றிக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றதால் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவிக்காக பதில் கடமை அடிப்படையில் உத்தியோத்தர் ஒருவரை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தின் தொழில்நுட்ப உத்தியோத்தர் (இயந்திரம்) பதவிக்காக முழு நேர அடிப்படையில் ஒருவரை நியமனம் செய்தல் தற்போது தேவைப்படவில்லை. | |
| (ஆ) | கணக்காய்வுத் திகதியாகிய 2024 ஜனவரி 19 திகதியில் உள்ளவாறு ஆணைக்குழுவின் உள்ளவாறான பதவியணி 219 ஆக காணப்பட்டது. அவர்களில் 84 உத்தியோகத்தர்களில் ஆணைக்குழுவில் கடமையாற்றிய காலம் 05 வருடங்களும் 15 உத்தியோகத்தர்களின் ஆணைக்குழுவில் சேவைக் காலம் 10 வருடங்களை மிகைத்திருந்தது. | இந்த அலுவலகம் விருப்பத்திற்குரிய சேவை நிலையமொன்றாக காணப்படாததுடன், 05 வருட கால சேவைக்கு பின்னர் கட்டாய இடமாற்றம் செய்தலுக்கு உட்படாதது. அலுவலகத்தில் காணப்படும் கடமையின் தன்மையின் காரணமாக இந்த அலுவலகத்திற்கு உத்தியோகத்தரை இடமாற்றம் செய்து அனுப்பும் போதும் அதற்கான முன்கூட்டிய இணக்கப்பாடொன்று பெற வேண்டியிருந்தது. ஏனைய அரச அலுவலகங்களில் காணப்படும் கடமைகளுக்கு மாற்றமாக கடமைகளின் தன்மையொன்று இந்த அலுவலகத்தில் பேணப்படுவதுடன், பயிற்சி மற்றும் அனுபவமுள்ள உத்தியோகத்தர்கள் ஒரே தடவையில் இடமாற்றம் செய்து நிறுவனத்தின் கடமைகளுக்கு ஆக்கபூர்வத் தன்மை மற்றும் செயற்திறனுக்கு நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துவதனால் ஐந்து வருட காலம் மிகைத்த காரணத்தினால் அவர்களை இடமாற்றக்கூடிய இயலுமை காணப்படவில்லை. | இடமாற்றக் கொள்கைக்கு இணங்க வேண்டியிருந்தது. |